வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin - 628 004
Tamilnadu
Public Relations Office

Tele Fax : 0461 - 2352360
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

**Press Release No: 15** **Date: 26.01.2023**

**74th Republic Day celebrations in V.O.Chidambaranar Port Authority**

**Ministry of Ports, Shipping and Waterways has approved for executing 8 CSR Projects by VOC Port at a total cost of Rs.184.15 Lakhs**

The 74th Republic Day has been celebrated by V.O.Chidambaranar Port in a grand manner at Port's School ground at 08:00 Hrs. on 26.01.2023.

Shri T.K. Ramachandran, I.A.S., Chairman, unfurled the National flag and took salute from the contingent of CISF, Port Fire Service and Port School's NCC cadets. In his Republic Day message, Shri T.K. Ramachandran, IAS, Chairman, V.O.Chidambaranar Port Authority, stated that the 'Constitution of India' is infused with Fundamental Rights and the framework for the Government to function in a transparent & accountable manner.

He also stated that the Port is taking all efforts to augment the cargo handling infrastructure by implementing several projects like Widening of the Port's entrance from 153 m to 230 m. Conversion of Berth No.9 as Container Terminal, providing link conveyors at Coal Jetty-I & II and North Cargo Berth-I and Mechanisation & Dredging of North Cargo Berth-III.

He further stated that Ministry of Ports, Shipping and Waterways, Government of India, has committed that, by the year 2030, all the Major Ports are to be made fully self-sustainable on electricity. As a part of the above commitment, V.O.Chidambaranar Port has taken up a number of initiatives like 400 KW Rooftop Solar Power Plants, 5 MW Ground Based Solar Power plant and 2 MW Wind Power. On completion of the above projects, VOC Port will be the first Major Port in India to meet its entire energy demand through indigenous renewable sources and will be the first Green Port of India.

He also conveyed that the Ministry of Ports, Shipping and Waterways has approved for executing 8 CSR Projects by VOC Port at a total cost of Rs.184.15 Lakhs;

1.Aqua Sports Centre at Tuticorin Beach near Camp – II at a cost of Rs.45.46 Lakhs
2.Financial Assistance for protection of Environment & Wildlife at a cost of Rs.33 Lakhs,
3.Financial Assistance for Creation of a State-of-the-art interpretation centre for Vallanadu Blackbuck Sanctuary at a cost of Rs.59 Lakhs

4. Financial Assistance for renovation of Mullakadu Primary Health Centre at a cost of Rs.10 Lakhs
5.Financial Assistance to provide uniform tablets for students for Dr. J. Jayalalitha Fisheries University at a cost of Rs.29 Lakhs
6.Emergency OPD Treatment to outsiders at Port Hospital at a cost of Rs.1.72 Lakhs
7.Financial Assistance for conducting sports coaching camp at a cost of Rs.55,000/-
8.Financial Assistance for Development of Greenbelt at VOC Port Estate at a cost of Rs.5.42 Lakhs

He also acknowledged the dedicated services, support and cooperation extended by the employees, Officers, Trade Unions, and Stakeholders for the growth achieved by V.O.Chidambaranar Port in the recent past.

As the part of the celebration, Shri T.K. Ramachandran, I.A.S., Chairman, distributed the Traffic Performance Awards for the year 2021-22 for exemplary performance of Steamer Agents, Stevedores, Container Vessel Operators, Container Liners, Container Freight Stations, Custom House Agents, Exporters, Importers and Business Partners. He distributed the Meritorious Awards to the officers and staff of various Departments of Port. He also inaugurated the new Beach Volleyball court at the Port’s school ground.

The above details were released in the Press Release by V. O. Chidambaranar Port Authority, today.

Public Relations Officer

SAGARMALA
Azadi Ka Amrit Mahotsav
வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin - 628 004
Tamilnadu
Public Relations Office

Tele Fax : 0461 - 2352360
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

மக்கள் தொடர்பு அலுவலகம்

பத்திரிக்கைச் செய்தி எண் :15 தேதி :26-01-2023

**வ.உ. சிதம்பரனார் துறைமுக ஆணையத்தில் 74வது குடியரசு தின விழா கொண்டாட்டப்பட்டது. வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் பெருநிறுவன சமூக பொறுப்பு கூட்டமைப்பின்கீழ் 8 திட்டங்கள் ரூபாய் 184.15 இலட்சம் செலவில் செயல்படுத்த மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகம் ஒப்புதல்**

இந்திய திருநாட்டின் 74-வது குடியரசு தின விழா, வ.உ. சிதம்பரனார் துறைமுக ஆணையத்தில் சிறப்பான முறையில் 26.01.2023 இன்று காலை 8.00 மணியளவில் கொண்டாடப்பட்டது. 74வது குடியரசு தின விழாவை முன்னிட்டு திரு தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் அவர்கள், தேசியக் கொடியை ஏற்றி வைத்து, மத்திய தொழில் பாதுகாப்புப் படை (CISF), துறைமுக தீயணைப்புப் படை, துறைமுக பள்ளி மாணவ, மாணவியர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

குடியரசு தின விழாவின் சிறப்புரையில், வ.உ. சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் திரு தா.கி. ராமசந்திரன், இ.ஆ.ப., அவர்கள் இந்திய அரசியலமைப்பானது ஜனநாயகம், நீதி, சுகந்திரம் மற்றும் சமத்துவத்திற்கான சான்றாகும். இது அனைத்து குடிமக்களுக்கான சில அடிப்படை உரிமைகளைக் உத்தரவாதப்படுத்தியதுடன், அரசு வெளிப்படையாக மற்றும் பொறுப்பான முறையில் செயல்படுவதற்கான கட்டமைப்புகளையும் வழங்குகிறது என்று கூறினார்.

மேலும் அவர் துறைமுகத்தில் சரக்கு கையாளுவதற்கு தேவையான அனைத்து உள்கட்டமைப்பு திட்டப்பணிகளான துறைமுக நுழைவு வாயிலை தற்போதுள்ள 153 மீட்டரிலிருந்து 230 மீட்டராக அகலப்படுத்தும் பணி, பொது சரக்குதளம் 9-ஐ சரக்குபெட்டக முனையமாக மாற்றுதல், நிலக்கரி தளம் - 1 மற்றும் 2, வடக்கு சரக்குதளம் 1-ல் கன்வேயர் இணைப்பு (Link Conveyor) மூலம் கையாளுவதற்கான ஒப்பந்த விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது மற்றும் வடக்கு சரக்குதளம் 3-ஐ இயந்திரமயமாக்கல் மற்றும் ஆழப்படுத்தும் பணி ஆகிய திட்டங்ளை செயல்படுத்தி வருகிறது என்று கூறினார்.

மேலும் அவர், கப்பல், துறைமுகங்கள் மற்றும் நீர்வழி போக்குவரத்து அமைச்சகம் விடுத்துள்ள உறுதியினை கருத்தில் கொண்டு 2030 ஆம் ஆண்டிற்குள், அனைத்து பெருந்துறைமுகங்களும் மின்சாரத்தில் முழுமையாகத் தன்னிறைவு பெறக்கூடியதாக மாற்றப்படும், இதனை உறுதிப்படுத்தும் விதமாக வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் 400 கிலோவாட் மேற்கூரை சூரிய மின் உற்பத்தி நிலையம், 5 மெகாவாட் தரைதள சூரிய மின் நிலையம் மற்றும் 2 மெகாவாட் காற்றாலை மின்சார உற்பத்தி போன்ற பல்வேறு திட்டபணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலே கூறப்பட்டுள்ள திட்டங்கள் முடிவடையும் தருவாயில், புதுப்பிக்கப்பட்ட எரிசக்தி மூலம் பெறப்படும் முழு மின்ஆற்றலை கொண்டு துறைமுகத்திற்கு தேவையான மின்ஆற்றலை பூர்த்தி செய்ய முடியும், இதன் மூலம் முழுமையாக புதுபிக்கப்பட்ட மின்ஆற்றலை கொண்டு செயல்படும் இந்தியாவின் முதல் பெருந்துறைமுகமாக வ.உ.சிதம்பரனார் துறைமுகம் திகழ்வதோடு, இந்தியாவின் முதல் பசுமை துறைமுகமாக மாறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று கூறினார்.

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் பெருநிறுவன சமூக பொறுப்பு கூட்டமைப்பின்கீழ் 8 திட்டங்கள் ரூபாய் 184.15 இலட்சம் செலவில் செயல்படுத்த மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அவை

1. ரூபாய் 45.46 இலட்சம் செலவில் தூத்துக்குடி கடற்கரை பகுதியில் (அனல்மின் குடியிருப்பு- 2 அருகாமையில்) நீர் விளையாட்டு மையம் அமைத்தல்
2. ரூபாய் 33 இலட்சம் செலவில் சுற்றுச்சூழல் மற்றும் வன விலங்கு பாதுகாப்பிற்கு தேவையான நிதியுதவி வழங்குதல்
3. ரூபாய் 59 இலட்சம் செலவில் வல்லநாடு விலங்குகள் சரணாலயத்திற்கு அதிநவின விளக்க மையம் அமைப்பதற்கு நிதியுதவி வழங்குதல்
4. ரூபாய் 10 இலட்சம் செலவில் முள்ளக்காடு பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை புதுப்பிப்பதற்கு நிதியுதவி வழங்குதல்
5. ரூபாய் 29 இலட்சம் செலவில் டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வள பல்கலைகழகத்திலுள்ள மாணவர்களுக்கு சீருடை வாங்குவதற்கு நிதியுதவி வழங்குதல்
6. ரூபாய் 1.72 இலட்சம் செலவில் துறைமுக மருத்துவமனையில் வெளிநோயாளிகளுக்கு அவசர சிகிச்சைகாக நிதியுதவி வழங்குதல்
7. ரூபாய் 55,000 செலவில் விளையாட்டு பயிற்சி முகாம் நடத்துவதற்காக நிதியுதவி வழங்குதல்
8. ரூபாய் 5.42 இலட்சம் செலவில் துறைமுக பகுதியில் பசுமை திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குதல் போன்ற திட்டங்களை செயல்படுத்த உள்ளது என்று கூறினார்.

மேலும் அவர், தனது உரையில் துறைமுக ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் சிறப்பான பணி, தொழிற்சங்களின் ஒத்துழைப்பு மற்றும் துறைமுக உபயோகிப்பாளர்களின் சீரிய செயல்பாட்டிற்கு நன்றி தெரிவித்துடன், வ.உ.சிதம்பரனார் துறைமுகம் வரும் காலங்களில் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று கேட்டு கொண்டார்.

திரு தா.கி. ராமசந்திரன், இ.ஆ.ப, வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர், அவர்களால் 2021-2022-ம் ஆண்டில் சிறப்பாக செயல்பட்ட துறைமுக உபயோகிப்பாளர்களான, கப்பல் முகவர்கள், ஸ்டிவிடோர், சுங்கதுறை முகவர்கள், சரக்குபெட்டகம் இயக்குபவர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. மேலும் துறைமுகத்தில் மிகச் சிறப்பாக பணிபுரிந்த அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்கள்.

இவ்விழாவின் இறுதியாக துறைமுக பள்ளி மைதானத்தில் ரூபாய் 3.2 இலட்சம் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கடற்கரை கைபந்து மைதானத்தை திரு தா.கி. ராமசந்திரன், இ.ஆ.ப., வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் அவர்கள் துறைமுக துணைத் தலைவர் திரு.பிமல்குமார் ஜா மற்றும் துறை தலைவர்கள் முன்னிலையில் திறந்து வைத்தார்கள்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி